**107**

# வ.உ.சி. யின் உரைத்திறன் - திருக்குறள் அறத்துப்பால் விருத்தியுரையை முன் வைத்து...

**செல்வி. நிதர்ஷனா நகுலேஸ்வரன்**
விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

**ஆய்வுச்சுருக்கம்:**

திருக்குறளின் கருத்துவளம் காரணமாக அதற்குப் பல்வேறு உரைகள் தோன்றியுள்ளன. உரை எழுதுவது என்பது வெறும் பொருள் விளக்கம் மட்டுமல்ல. அது குறளின் உள்ளார்ந்த தத்துவம், சமூக நோக்கம், மனிதநேயப் பார்வை ஆகியவற்றைக் காலச் சூழலோடு வெளிப்படுத்தும் அறிவார்ந்த செயலாகும். பழைய உரையாசிரியர்களின் உரைகள் இலக்கண விளக்கம், சொற்பொருள் விரிவாக்கல், சமய தத்துவ விளக்கம் என்பவற்றை மையமாகக் கொண்டிருந்தன. காலம் மாற சமூகச் சூழலும் அரசியல் நிலையும் மாற்றம் கண்டது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்திய சமூகத்தில் தேசிய விழிப்புணர்வு, சுதந்திர உணர்வு, சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் தீவிரமடைந்தன. இத்தகைய சூழலில் இலக்கியங்கள் புதிய கோணத்தில் அணுகப்பட்டன.திருக்குறளையும்சமகாலப்பிரச்சினையோடுஇணைத்து உரைகாணத் தொடங்கினர். இத்தகைய புதிய அணுகுமுறையின் முக்கிய ஆளுமையாக வ.உ.சிதம்பரம்பிள்ளை அவர்கள் திகழ்கின்றார். இவர் சுதந்திரப் போராட்ட வீரராக மட்டுமன்றி சிறந்த அறிஞராகவும் சமூக சீர்திருத்தவாதியாகவும் விளங்கினார். இதனால் இவரது உரையில் இலக்கிய நயம், அரசியல் விழிப்புணர்வு, சமூக நீதிக் கருத்துக்கள் இயல்பாகக் கலந்துள்ளன. இவரது திருக்குறள் உரைத்திறனை ஆய்வு செய்வதனூடு திருக்குறள் உரை மரபின் வளர்ச்சியையும் தேசியச் சிந்தனையும் தமிழ்ச்சிந்தனையும் இணையும் தன்மையையும் விளங்கிக் கொள்ள முடியும். வ.உ.சி அவர்களின் திருக்குறள் உரையின் தன்மையையும் சிறப்பையும் ஆராய்வதோடு திருக்குறள் ஒரு இலக்கிய நூலாக மட்டுமன்றி சமூக மாற்றத்திற்கான சிந்தனை நூலாகவும் விளங்குகிறது என்பதையும் அந்தப்பார்வையை வளர்த்தெடுத்தவர்களில் வ.உ.சி. அவர்களின் பங்கு எத்தகையது என்பதையும் ஆராயும் முயற்சியாக இவ்வாய்வு அமைகிறது. விவரண மற்றும் பகுப்பாய்வின் அடிப்படையில் இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகிறது.

திறவுச்சொற்கள்: திருக்குறள், உரை, சமூகநோக்கு

**வ.உ.சி.:**

சுதந்திரப் போராட்ட வரலாற்றில் 'கப்பலோட்டிய தமிழன்' என்ற சிறப்புப் பெயரால் அறியப்படுபவர் வ.உ. சிதம்பரம்பிள்ளை. அரசியலில்

அதிக ஈடுபாடுகொண்ட வ.உ.சி தனது வாழ்க்கையின் ஆரம்பத்தில் சுதந்திரப் போராட்டத்திற்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டார். ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் இலக்கியப்பணி செய்திருந்த போதும் வ.உ.சி என்றதும் அவரது அரசியல் செயற்பாடுகளே முதன்மை பெறுகின்றன. வ.உ.சி இலக்கியப் படைப்பாளனாக, பதிப்பாசிரியனாக, உரையாசிரியனாக, மொழிபெயர்ப்பாளராக எனப் பல தளங்களில் செயற்பட்டுள்ளார். சுயசரிதை, மெய்யறிவு, மெய்யறம், பாடற்றிரட்டு ஆகிய நூல்களைப் படைத்துள்ளார். இன்னிலை, திருக்குறள் அறத்துப்பால் ஆகியவற்றுக்கு விருத்தியுரையும் சிவஞானபோதத்திற்கு உரையும் எழுதியுள்ளார். திருக்குறள் அறத்துப்பால் மணக்குடவர் உரை, தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரை என்பவற்றைப் பதிப்பித்துள்ளார். மனம்போல வாழ்வு, அகமேபுறம், வலிமைக்கு மார்க்கம், சாந்திக்கு மார்க்கம் ஆகியன இவரது மொழிபெயர்ப்பு நூல்களாகும்.

### திருக்குறளும் உரை மரபும்:

காலம்தோறும் பழந்தமிழ் நூல்களுக்கு உரை எழுதும்போக்கு நிகழ்ந்த வண்ணமே உள்ளது. திருக்குறளுக்கு மணக்குடவர் முதலாக பதின்மர் எழுதிய உரைகள் பழைய உரைகளாகக் கிடைத்துள்ளன. ஆழ்ந்த புலமையும் இலக்கணச்செறிவும் பொருள்காணும் நுட்பமும் பொருத்தமான மேற்கோளும் தக்க உவமைகளும் கொண்ட பரிமேலழகரின் உரை பிறரது உரைகளைப் பின்னுக்குத் தள்ளி பதினெட்டாம் நூற்றாண்டுவரை தனித்துக் கோலோச்சி வந்தது. திருக்குறளைப் பரிமேலழகர் உரையுடன் பயில்வது வழக்கமாகக் காணப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பகுத்தறிவுச் சிந்தனைகள் தலைதூக்கத் தொடங்கின. ஆங்கிலேயர் வருகையும் அச்சியந்திரத்தின் அறிமுகமும் உரை எழுதும் போக்கில் திருப்பத்தை ஏற்படுத்தியிருந்தாலும் திருக்குறளுக்கான உரை என்பது பரிமேலழகர் உரையைத் தழுவி அதனை எளிமைப்படுத்தும் முயற்சியாகவே அமைந்தது. இருபதாம் நூற்றாண்டில் பரிமேலழகர் உரையை அப்படியே ஏற்றுக்கொள்ளுதல் என்னும் நிலையில் இருந்து மாறி புதிய உரை காணும் முயற்சியில் பலரும் ஈடுபட்டனர். சமகாலத்தில் ஏற்பட்ட புதிய சிந்தனைகளும் சமூக மாற்றங்களும் இப்புதிய முயற்சியில் தமிழறிஞர்களை ஈடுபட வைத்தன. இத்தகைய புதிய முயற்சியில் ஈடுபட்டவர்களில் வ.உ.சி அவர்கள் தனித்து நோக்கப்பட வேண்டியவர்.

### வ.உ.சி. யும் திருக்குறளும்:

வ.உ.சி திருக்குறளின் அறத்துப்பாலில் உள்ள 38 அதிகாரங்களுக்கு உரை வரைந்துள்ளார். மணக்குடவர் உரையையும் பரிமேலழகர் உரையையும் ஒப்பிட்டுப்பார்த்து இரண்டிற்கும் இடையில் பொருள்கோள் முறையிலும் அமைப்பு முறையிலும் பல வேறுபாடுகள் இருப்பதை அவதானித்துள்ளார். இதுவரை திருக்குறளுக்குக் கிடைத்த உரைகளில் பரிமேலழகர் உரையும் மணக்குடவர் உரையும் சிறப்பானது எனக் கூறப்பட்டாலும் இவற்றிலும் மிக நீண்ட விளக்கங்கள் காணப்படுதல்,

பழமையான சொற்களைக் கையாண்டிருத்தல், தவறான மூலங்களைக் கொண்டிருத்தல், நுணுக்கமாகச் சிந்திக்கும்போது ஏற்றுக்கொள்ள முடியாத விளக்கங்களைக் கொண்டிருத்தல் போன்ற குறைபாடுகள் இருப்பதாகச் சுட்டியுள்ளார். இத்தகைய குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு திருக்குறள் அறத்துப்பாலுக்கு விருத்தியுரை செய்துள்ளார். 'திருக்குறளை நேரிய பொருளோடும் பிழைகள் இன்றியும் எளிதில் கற்கும்படியாக அதற்கு ஓர் உரை இயற்றப் பல ஆண்டுகள் முன் நினைத்தேன்' எனத் தான் உரை எழுதியமைக்கான காரணத்தைக் கூறியுள்ளார். இவர் திருக்குறளை கலைவடிவமாக மட்டுமன்றி சமூக மாற்றத்திற்கான கருவியாகவும் கருதி உரை வரைந்துள்ளார்.

**பாயிரம் பற்றிய ஆராய்ச்சி:**

திருக்குறளின் பாயிரம் வள்ளுவரால் இயற்றப்பட்டது என்பது உரையாசிரியர்கள் பலரதும் ஒப்ப முடிந்த கருத்து. ஆனால் வ.உ.சி இக்கருத்துடன் முரண்படுகின்றார். 'அறன்வலியுறுத்தல்' என்னும் அதிகாரத்தையே பாயிரமாகக் கொண்டு அதனுள் அடங்குகின்ற கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை ஆகிய மூன்று அதிகாரங்களும் இடைக்காலப் புலவர்களால் பாடிச் சேர்க்கப்பட்டது என்கிறார். இவை இடைக்காலத்தில் வந்து சேர்ந்தவை என்பதால் யாவரும் தெரிந்து கொள்ளும் பொருட்டு 'இடைப்பாயிரம்' என்று தலைப்புக் கொடுத்துள்ளார்.

**இயல் பகுப்பு:**

திருக்குறளின் பால் பகுப்பை மூன்றாக ஏற்றுக்கொண்டாலும் அறத்துப்பாலை இயல்களாகப் பகுப்பதில் பரிமேலழகரிடம் இருந்து வ.உ.சி வேறுபடுகிறார். பரிமேலழகர் அறத்துப்பாலை பாயிரம், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என நான்காக வகைப்படுத்த, வ.உ.சி இவற்றோடு 'வீட்டியல்' என்னும் புதிய இயலையும் இணைத்து ஐந்தாகப் பாகுபடுத்தியுள்ளார். 'வீடு இல்வாழ்வார், துறந்தாராகிய இரு திறத்தார்க்கும் உரியதாகலானும் அறத்துப்பாலில் 'வீட்டியல்' என ஓர் இயல் உண்டென்று யான் கேட்டிருக்கின்றமையானும் நிலையாமை முதலிய நான்கு அதிகாரங்களும் வீட்டியலுக்குரியவாகலானும் அவற்றை வீட்டியல் என்று ஓர் இயலாக அமைத்துள்ளேன்;' என வீட்டியல் என்னும் புதிய இயலை வைத்தமைக்கான காரணத்தைக் கூறியுள்ளார்.

**அதிகார வைப்பு:**

பரிமேலழகர் இல்லறவியலில் வைத்துள்ள வெஃகாமை, பயனில சொல்லாமை என்னும் இரண்டு அதிகாரங்களையும் துறவறவியலிலும் துறவறவியலில் காணப்பட்ட வாய்மை, கள்ளாமை என்னும் இரண்டு அதிகாரங்களையும் இல்லறவியலிலும் வைத்து புது அதிகார வைப்பு முறையை உருவாக்கியுள்ளார். 'வாய்மையும் கள்ளாமையும் இல்வாழ் வார்க்கு இன்றியமையாதனவாகலானும் வெஃகாமையும் பயனில் சொல்லாமையும் இல்வாழ்வார் கைக்கொள்வதற்கு அரியனவாகலானும்

அவை துறவிகள் கைக்கொள்வதற்கு உரியவையாகலானும் முன்னிரண்டு அதிகாரங்களின் பாக்களிற் சில இல்வாழ்வாரைக் குறித்தும் பின்னிரண்டு அதிகாரங்களின் பாக்களிற் சில துறவிகளைக் குறித்தும் பாடப்பட்டிருக்கின்றமையானும் அவ்வாறு செய்தேன்' என அதிகார வைப்புமுறையில் மாற்றம் ஏற்படுத்தியமைக்கான காரணத்தைக் கூறியுள்ளார்.

**அதிகாரங்களின் பெயர் மாற்றம்:**

'புதல்வரைப்பெறுதல்' என்னும் அதிகாரத்தினை 'மகப்பேறு' என்றும் 'அழுக்காறாமை' என்னும் அதிகாரத்தை 'அழுக்கறாமை' எனவும் பெயர் மாற்றம் செய்துள்ளார்.

**குறள் வைப்பு முறையில் மாற்றம்:**

வாய்மை என்ற அதிகாரத்தில் பரிமேலழகர் முதலாவதாக அமைத்துக்கொண்ட

*'வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*

*தீமை இலாத சொலல்'*

என்ற குறளை வ.உ.சி இரண்டாவதாக அமைத்துள்ளார். பரிமேலழகரது

*'தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்*

*தன்னெஞ்சே தன்னைச் சுடும்'*

என்ற மூன்றாவது குறள் வ.உ.சி. யின் உரையில் முதலாவது குறளாக வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

**தனிப்பொருள் விளக்கம் தருதல்:**

குறளுக்கு விளக்கம் கூறும்போது சில குறள்களுக்குத் தனிப்பொருள் விளக்கம் தருகிறார்.

*'நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்*

*வானின் றமையா தொழுக்கு'*

என்ற குறளில் 'யார்யார்க்கும்' என்ற சொல்லிற்குத் தனிப்பொருள் விளக்கம் தந்துள்ளார். யார் யார்க்கும் - யார்க்கும் யார்க்கும். யார்க்கும் யார்க்கும் என்று இரட்டித்து மொழிந்தமையால், இல்வாழ்வார்க்கும் துறந்தார்க்கும் என்று பொருள் உரைக்கப்பட்டது.' இவ்வாறு தனிப்பொருள் விளக்கம் தருகின்றமையானது சொற்களின் பொருட் செறிவும் அச்சொல் இடம்பெற்றுள்ள குளறின் கருத்துப்போக்கும் மேலும் விளக்கம் பெறுகின்றது எனலாம்.

**புதிய விளக்கம் தருதல்:**

சில குறட்பாக்களுக்கு வ.உ.சி தம் காலத்திற்கு ஏற்றாற் போல புதுமையான விளக்கம் தந்துள்ளார். சான்றாக,

*'அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை*

*நின்றாரிற் பேதையா ரில்'*

என்ற குறளுக்குப் பொருள் கூறும்போது 'மறத்தின் கண் நின்றவர்களுள் எல்லாம் பிறன்வீட்டுப் புறவாயிலின்கண் நின்றவரைப்போல மடையர் இல்லை' எனப் பொருள் கூறியவர் விளக்கம் தரும்போது,'கடை-புறம். அறத்திற்குப் புறம் மறமாதலின் அதனை அறன்கடை என்றார். பிறன் மனையாளிடம் செல்பவர் அவன் வீட்டு முன்வாயில் வழியாக செல்லாமல் ஒளிந்து பின்வாயிலின் வழியாக செல்வது வழக்காகலின் பிறன்கடைநின்றார்' எனக் கூறியுள்ளார். இதன் மூலம் தமது கருத்திற்கு உலகவழக்கின் அடிப்படையில் விளக்கம் தந்துள்ளமையைக் காணலாம். இத்தகைய விளக்கத்தால் சொற்களின் நேர்ப்பொருளும் நுணுகிய பொருளும் வெளிப்பட்டு நிற்கின்றன. மேலும் சொற்களுக்குப் பொருள் கூறும்போது சுற்றிவளைக்காது நேரடிப்பொருள் தந்துள்ளமையைக் காணலாம். உலக வழக்கின் அடிப்படையில் புதிய விளக்கம் தருதலானது திருக்குறளை உயிரோட்டமுள்ள வாழ்வியல் நூலாக மாற்றுகிறது.

**வருவிக்கப்பட்ட சொற்களுடன் விளக்குதல்:**

வருவிக்கப்பட்ட சொற்களை உரையின் இடையிடையே அமைத்து அவற்றை அடையாளப்படுத்துவதற்காக அடைப்புக்குறியினைப் பயன்படுத்தியுள்ளார். வருவிக்கப்பட்ட சொற்களுடன் உரை கூறுவது உரைவரலாற்றில் புதுமையாக உள்ளது.

*'கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே*

*யெடுப்பதூஉ மெல்லாம் மழை'*

என்ற குறளுக்குப் பின்வருமாறு விளக்கம் தருகிறார். 'கெடுப்பதூஉங் (பெய்யவேண்டிய காலத்துப் பெய்யாதும், பெய்யவேண்டாத காலத்துப் பெய்தும் மாற்றாரைக்) கெடுப்பதும் கெட்டார்க்குச் சார்வாய் எடுப்பதும் - கெட்டவர்க்குத் துணையாகி (ப் பெய்ய வேண்டிய காலத்துப் பெய்தும் பெய்ய வேண்டாத காலத்துப் பெய்யாதும் அவரை) ஆக்குவதும் எல்லாம் மழை(யே) - (இவை) எல்லாம் (செய்ய வல்லது) மழையே. 'இவ்வாறு வருவிக்கப்பட்ட சொற்களுடன் உரை கூறியுள்ளமையானது உரையை எளிமையாகவும் தெளிவாகவும் இடர்ப்பாடின்றி விளங்கிக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

**புணர்ச்சிச் சொற்களைப் பிரித்துக்காட்டுதல்:**

பொருளை விளங்கிக்கொள்வதில் இடர்படும் புணர்ச்சிச் சொற்களைப் பிரித்துக்காட்டிப் படிப்போர் சொற்பொருளை விளங்கிக்கொள்ளும் வகையில் குறிப்பிட்டுள்ளார்.

பொருட்டு - பொருள் + து- பொருளையுடையது

பான்மைத்து- பால் + து - தன்மைத்து

படிற்றொழுக்கம்- படிறு + ஒழுக்கம் -பொய்

புக்கில்- புகு + இல் -இல்லம்

புணர்ச்சிச் சொற்களைப் பிரித்துக் காட்டுவது குறளின் மையக்கருத்தை

விளங்கிக் கொள்ளவும் உரையாசிரியரின் சமூக நோக்கைப் புரிந்து கொள்ளவும் உதவுகிறது.

**கொண்டுகூட்டிப்பொருள் உரைத்தல்:**

திருக்குறளின் மொழிநடை மிகச் சுருக்கமானது. சொற்கள் தனித்தனியாக நேரடிப்பொருளைத் தராமல் அவற்றை ஒன்றொடு ஒன்று கூட்டிப் பொருள் கொள்ளும் போது முழுமையான கருத்து வெளிப்படுகிறது. இவர் குறளின் சொற்களைப் பிரித்து விளக்காமல் குறளின் மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கைச் சூழலோடு இணைத்து கொண்டு கூட்டிப் பொருள் வழங்குகிறார்.

*'அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை*

*வேண்டும் பிறன்கைப் பொருள்'*

என்ற குறள் கொண்டுகூட்டிப் பொருளுரைத்துள்ள முறையால் சிறக்கின்றது எனலாம். செல்வத்திற்கு என்பதிலுள்ள நான்காம் வேற்றுமை உருபைப் பிரித்து அஃகாமை என்பதனுடன் சேர்த்து 'செல்வம் அஃகாமைக்கு வழி யாதெனின்' எனப் பொருள் கூறியுள்ளார்.

**பாடபேதம் காணுதல்:**

பாடபேதம் காணுதல் என்பது குறளின் மூலப்பொருளைத் தெளிவுபடுத்துவதோடு மட்டுமல்லாமல் உரையாசிரியரின் சிந்தனைப்போக்கு, கருத்துத் தேர்வு மற்றும் நோக்கத்தைப் புரிந்து கொள்ள உதவுகிறது. அறத்துப்பாலில் வ.உ.சி 44 மூலபாடங்களைக் கண்டுபிடித்துள்ளார். 'பொறையுடைமை' என்ற அதிகாரத்தில் உள்ள

*'திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து*

*திறனல்ல செய்யாமை நன்று'* – *என்ற குறளை*

*'அறனல்ல தற்பிறர்செயினும் நொந்து*

*திறனல்ல செய்யாமை நன்று'*

என புதிய சொற்களை அமைத்தும் சொற்களின் வரன்முறையினை மாற்றியும் அமைத்துள்ளார். பொதுவாக உரையாசிரியர்கள் பாட வேறுபாடு காணப்படின் அவற்றை அடிக்குறிப்புக்களாகச் சுட்டிச் செல்வது வழக்கம்; ஆனால் வ.உ.சி இவற்றுக்கு மாறாக தான் கண்ட பாடவேறுபாடுகளை மூலத்தில் காட்டியுள்ளார். பாடவேறுபாடு காட்டியவர் அதற்கான காரணத்தையும் தந்து செல்கின்றமை சிறப்பானது. திருக்குறள் அறத்துப்பாலுக்கு மிகச்சீரிய ஆழமான உரையினை புதுமைக் கண்ணோட்டத்துடன் வ.உ.சி ஆக்கியுள்ளார்.

**பழைய உரையை மறுத்தல்:**

பரிமேலழகர் உரையைத் தழுவி பெரும்பாலும் உரை செய்த வ.உ.சி சிற்சில இடங்களில் பொருள் பொருத்தமின்மை, சொற்களின் வைப்புமுறையின் பொருத்தமின்மை, உலகவழக்கோடு முரண்படுதல், இலக்கணப் பொருத்தமின்மை போன்ற காரணங்களை முன்வைத்து

அவரது உரையினை மறுத்து புதிய உரை செய்துள்ளார். 'அறத்துப்பாலில் 76 குறள்களில் என் உரை பரிமேலழகர் உரைக்கு வேறுபடுகின்றது' எனக் குறிப்பிட்டுள்ளார்.

*'தோன்றிற் புகழொடுதோன்றுக அஃதிலார்*

*தோன்றலிற் தோன்றாமை நன்று'*

என்ற குறளுக்கு ஒருவர் பல்லார்முன் தோன்றில் புகழுடன் தோன்றுக என்றும் புகழ் இல்லாதார் பல்லோர்முன் தோன்றுதலினும் தோன்றாதிருத்தல் நன்மை என்று பொருளுரைத்து தோன்றல் என்பதனை பிறத்தல் என்ற பொருளில் பரிமேலழகர் உரை வரைந்தார். வ.உ.சி பிறத்தலும் பிறவாதிருத்தலும் ஒருவன் விருப்பப்படி நிகழ்வன அல்ல; அவன் முன்வினைப் படியே நிகழ்வன. என அவரது உரையை மறுக்கின்றார்.

**இலக்கணக்குறிப்புத் தருதல்**

வ.உ.சி.யின் திருக்குறள் உரை உணர்ச்சி விளக்கம் அல்ல. இலக்கணமும் தர்க்கமும் சார்ந்த அறிவியல் உரை (மு.வரதராசனார்.) பொருளமைப்பு நோக்கி வினைமுடிபு, முடிக்குஞ்சொல், ஆகுபெயர், வேற்றுமை, அன்மொழித்தொகை, இடைச்சொல், அளபெடை முதலானவற்றைத் தெளிவுபடுத்துகின்றார்.

*'ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்*

*ஏதம் படுபாக் கறிந்து'*

என்ற குறட்பாவில் 'பாக்கு' என்பது தொழிற்பெயர் விகுதி என்றும் முதலாவது இன் (ஒழுக்கத்தின்) ஐந்தாம் வேற்றுமைப் பொருளிலும் இரண்டாம் இன் (இழுக்கத்தின்) மூன்றாம் வேற்றுமைப் பொருளிலும் வந்தன என்று இலக்கணக் குறிப்புச் சுட்டியுள்ளார். வ.உ.சி குறளின் பொருளை உணர்த்த இலக்கணத்தை ஒரு கருவியாக அல்ல அடிப்படையாகப் பயன்படுத்தினார்.

**இலக்கியமேற்கோள் காட்டுதல்:**

குறளின் கருத்துக்களுடன் ஒன்றிப்போகும் பிற இலக்கியக் கருத்துக்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார். விவேக சிந்தாமணி, நாலடியார், இன்னா நாற்பது போன்ற அறக் கருத்துக்களைக் கூறும் நூல்களையே மேற்கோளாகக் காட்டியுள்ளார். சான்றாக,

*'ஒல்லும் வகையா னறவினை யோவாதே*

*செல்லும்வா யெல்லாம் செயல்'*

என்ற குறளுக்கு செய்யக்கூடிய இடங்களிலெல்லாம் அறவினையை இடைவிடாது செய்க என்ற கருத்தைக் கூறி 'ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினது' என இனியவை நாற்பது என்ற நூலில் இருந்து மேற்கோள் காட்டித் தம் கருத்துக்கு வலுவூட்டுகின்றார்.

**முடிவுரை:**

வ.உ.சி. யின் உரையில் இலக்கியப் பார்வையும் சமூகப் பொறுப்பும் ஒருங்கிணைந்து, பாரம்பரிய உரைகளில் இருந்து மாறுபட்டதாக அமைகின்றது. குறளின் சொற்பொருளில் மட்டும் தங்கிவிடாமல் அவற்றின் உள்ளார்ந்த கருத்தை அன்றைய சமூக அரசியல் சூழலோடு இணைத்து விளக்கியுள்ளார். எளிய, தெளிவான மொழிநடையில் மக்களுக்குப் புரியும் வகையில் அமைத்துள்ளமையானது திருக்குறளை அறிவாளிகளுக்கான நூலாக மட்டுமன்றி பொதுமக்களும் அணுகக்கூடிய நூலாக மாற்றுகிறது. கருத்து வலிமையை முன்னிலைப்படுத்தி அலங்காரங்களையும் தவிர்த்து உரை எழுதியுள்ளமை இவரது உரைத்திறனின் முக்கிய அம்சமாகும். அடிமைத்தனம், சமூக அநீதி, ஒழுக்கச்சிதைவு, தேசிய அவமதிப்பு போன்ற பிரச்சனைகளை அவர் திருக்குறள் வழியாக எடுத்துரைத்துள்ளார். இதன் மூலம் திருக்குறள் ஒரு காலத்தால் கட்டுப்பட்ட நூலாக அன்றி ஒவ்வொரு காலத்திற்கும் பொருந்தக் கூடிய வாழ்வியல் வழிகாட்டி என்பதை எடுத்துக்காட்டியுள்ளார். இவரது உரை தமிழ் உரைமரபின் வளர்ச்சியையும் சமூக சிந்தனையின் தாக்கத்தையும் புரிந்து கொள்ள முக்கியமானதாகும். இவரது உரை பாரம்பரிய உரை மரபுகளில் இருந்து மாறுபட்டு, சமூக நோக்குடன் அமைந்துள்ளது எனலாம்.

**நூல் விபரப் பட்டியல்**

1. சிதம்பரம்பிள்ளை.வ.உ., (1935), திருக்குறளும் விருத்தியுரையும் உரை, தூத்துக்குடி.
2. சிதம்பரம்பிள்ளை.வ.உ., (1917), திருக்குறள் (மணக்குடவர் பதிப்பு), சென்னை.
3. ஆரவிந்தன்.மு.வை., (1983), உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
4. சங்கரவள்ளிநாயகம்.அ., (1994), வ.உ.சி வாழ்க்கை வரலாறும் இலக்கியப்பணிகளும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
5. சிவலிங்கராஜா.எஸ்., (2004), ஈழத்துத் தமிழ் உரைமரபு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு., (மோகன், இரா., சொக்கலிங்கம், 1985), உரைமரபுகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.